## ஒரு சில மாநிலங்களுக்கு மட்டுமானது ஒன்றிய நிதிநிலை அறிக்கை! ஆனால் நமது பட்ஜெட் ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற நோக்கில்

# தமிழ்நாட்டு மக்கள் அனைவர்க்கும் நன்மை தரும் பட்ஜெட்!

## சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு – அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கமான பதிலுரை!



**சென்னை, மார்ச் 23 -**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று முன்தினம், நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து கருத்தாழ மிக்கதோர் உரையாற்றிய நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, “ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை; இந்தியாவின் ஒருசில மாநிலங்களுக்கு மட்டுமான அறிக்கையாக அமைந்திருக்கிறது! ஆனால் நம்முடைய மாநில அரசு அளித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கை; கடைக்கோடி மக்களுக்கும் நன்மை செய்யக்கூடிய நோக்கில் அமைந்த அறிக்கை!” என்று பெருமிதத்துடன் விளக்கமாகக் குறிப்பிட்டார்.**

2025-2026-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின் மீதான விவாதத் திற்கு மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அளித்த பதிலுரை வருமாறு:-

2025-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது கடந்த நான்கு நாட்களாக நடைபெற்ற பொது விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றிடும் ஒரு நல்ல வாய்ப்பினை எனக்கு நல்கியிருக்கக்கூடிய தமிழ்நாடு முதலமைச்சர், எங்கள் ஆருயிர்த் தலைவர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் தலைவராகிய தங்களுக்கும், இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர் பெருமக்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தையும், நெஞ்சார்ந்த நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னை இந்தப் பேரவைக்கு தேர்ந்தெடுத்து அனுப்பி யிருக்கக்கூடிய திருச்சுழி தொகுதிவாழ் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றி யினைத் தெரிவித்துக்கொள்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீளாத் துயில் கொண்டிருக்கக்கூடிய இடம் நோக்கி, நான் தொழுது வணங்குகிறேன்.

**‘கடுஞ் சினத்த கொல் களிறும்;**
**கதழ் பரிய கலி மாவும்,**
**நெடுங் கொடிய நிமிர் தேரும்,**
**நெஞ் சுடைய புகல் மறவரும், என**
**நான்குடன் மாண்ட தாயினும், மாண்ட**
**அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்’**

-என்கிறார் மதுரை இளநாகனார் என்கிற சங்கப் புலவர் அவர்கள்.

“விரைந்து செல்லக்கூடிய கடிய சினத்தையுடைய யானைப்படை, விரைந்து செல்லக்கூடிய செருக்கை உடைய ஒரு குதிரைப்படை, உயர்ந்த கொடிகளையுடைய தேர்ப்படை, நெஞ்சில் வலிமையுடைய காலாட்படை என்று ஓர் அரசனிடத்திலே நான்கு படைகள் சிறப்பாக அமையப் பெற்றிருந்தாலும், பெருமைமிக்க அறநெறி ஒன்றுதான் அந்த மன்னனின் ஆட்சியினுடைய வெற்றிக்கு அடையாளமாக விளங்கும்” என்று மதுரை இளநாகனார் குறிப்பிட்டுச் சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி).

அத்தகைய அறநெறியினுடைய வழியில் நின்று, ஆட்சி புரியக்கூடிய முதலமைச்சர் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சிக்கு (மேசையைத் தட்டும் ஒலி) பெருமைகள் பலப்பலவாக இருந்தாலும், அறமே இந்த ஆட்சியினுடைய அடிப்படையாக அமைந்திருக்கிறது.

எனவேதான்,

**‘நமரெனக் கோல்கோ டாது,**
**பிறர் எனக் குணங் கொல்லாது,**
**ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்,**
**திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்**
**வானத்து அன்ன வண்மையும்’**

கொண்டு அறநெறி பிறழாமல், திறனறி மன்னராக, நல்லாட்சி புரியக்கூடிய நாயகராக முதலமைச்சர் அவர்கள் விளங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அவரை மருதன் இளநாகனாருடைய சொற்களில் “நீ நீடு வாழிய நெடுந்தகை” என்று நான் வணங்கி, என் உரையை நான் துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

“எல்லார்க்கும் எல்லாம்” என்ற முழக்கத்தை முன்வைத்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், 14-3-2025 அன்று சட்டமன்றத்தில் முன்வைத்த வரவு-செலவுத் திட்டத்தில் பல்வேறு அம்சங்கள் குறித்து கடந்த 4 நாட்களாகப் பல்வேறு கருத்துகளை முன்வைத்துப் பேசியிருக்கக்கூடிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்நாடு அரசு இன்றைக்கு அளித்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கைக்கும், ஒன்றிய அரசு அளித்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை நான் தொடக்கத்தில் மாமன்ற உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் நன்றாக அறிவார்கள்.

### சீர்தூக்கும் துலாக்கோல்

ஒன்றிய அரசினுடைய நிதிநிலை நீங்கள் அனைவரும் அறிந்தவண்ணம் இந்தியாவினுடைய ஒருசில மாநிலங்களுக்கு மட்டுமான நிதிநிலை அறிக்கையாக இன்றைக்கு அமைந்திருக்கிறது. குறிப்பாக, உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களுக்கு மாத்திரமான ஒரு நிதிநிலை அறிக்கையாக ஒன்றிய அரசினுடைய நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. ஆனால், முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, நம்முடைய மாநில அரசு இன்றைக்கு அளித்திருக்கக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கை என்பது தமிழ்நாட்டினுடைய கடைக்கோடி மக்களுக்கும் நன்மை செய்யக்கூடிய நோக்கில் அமைந்திருக்கக்கூடிய ஒரு நிதிநிலை அறிக்கை மட்டுமல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் காலத்தில் ஒருவேளை எங்களுக்கு ஆதரவாக இல்லாத ஒரு சூழ்நிலை இருந்தாலும்கூட, எப்படி புவியிலே வாழக்கூடிய மக்களுக்கு நிறம் பார்த்து வேறுபாடு இல்லாமல் வான் மழையானது அத்தனை பேருக்கும் சமமாகப் பொழிகிறதோ, அதைப்போல, முதலமைச்சர் அவர்கள் சமன்செய்து சீர்தூக்கும் துலாக்கோல்போல் அனைத்துப் பகுதிகளையும் சமமாகப் பாவித்து, தமிழ்நாட்டினுடைய எல்லாப் பகுதிகளுக்கும் தேவையான உரிய வளர்ச்சித் திட்டங்களை அறிவிக்க எங்களுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார் என்பதை நான் நெஞ்சுயர்த்திப் பெருமையாக இந்த மாமன்றத்திலே நான் தெரிவிப்பேன். அதன் காரணமாகவே இந்த நிதிநிலை அறிக்கையை இன்றைக்கு அனைவரும் பாராட்டக்கூடிய ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்.

இன்னொன்று, நம்முடைய உயிரினும் மேலான தமிழ்மொழியைவிட வட மொழிக்கும், இந்தி ஆகிய மொழிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்ளக்கூடிய ஒன்றிய அரசு ஒருபுறம் இருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழ்நாடு அரசு பழங்குடி மக்கள் பேசக்கூடிய அந்தப் பழங்குடி மொழிகளுக்கும் உரிய கவனம் கொடுக்கக்கூடிய ஓர் அரசாக இன்றைக்கு நாம் பரிணமித்து வந்திருக்கிறோம் என்பதை இந்த நிதிநிலை அறிக்கையில் உங்களால் கவனித்துப் பார்க்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

### சொந்த நிதி ஆதாரங்கள்!

அதேபோல போக்குவரத்துத் துறையை நீங்கள் எடுத்துக்கொள்வீர்கள் என்று சொன்னால், ஒன்றிய அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு இரயில்வே திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கக்கூடிய நிதி 19 ஆயிரத்து 68 கோடி ரூபாய் மட்டும்தான்; ஆனால், உத்தரப் பிரதேசத்திற்கு 2025--2026 இந்த ஓராண்டிற்கு மட்டும் நம்முடைய ஒன்றிய அரசு ஒதுக்குவதற்கு உத்தேசித்திருக்கக்கூடிய தொகை அதே 19 ஆயிரத்து 858 கோடி ரூபாய்; அதாவது நமக்கு மூன்று ஆண்டுகளிலே கொடுக்கக்கூடிய அந்தத் தொகையை ஒரே ஆண்டிலே உத்தரப் பிரதேசத்திற்கு ஒன்றிய அரசு வழங்குகிறது என்று சொன்னால், ஒன்றிய அரசினுடைய நிதிநிலை அறிக்கைக்கும், நாம் கொண்டு வந்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கைக்கும் இருக்கக்கூடிய வேறுபாட்டை உங்களால் மிக எளிதாகப் புரிந்துகொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்.

இப்படி நாம் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வந்தாலும்கூட இந்தியாவிலே மிக அதிகமான மதிப்பீட்டிலான சென்னை இரண்டாம் கட்ட Metro Rail திட்டத்தை ஒன்றிய அரசினுடைய நிதி உதவியின்றி, தன்னுடைய சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு தமிழ்நாடு செயல்படுத்த ஆரம்பித்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, அவர்கள் வற்புறுத்திய பின்னர்தான், ஒன்றிய அரசு தனது பங்கினை தமிழ்நாட்டிற்கு வழங்கியது என்பதனை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அதுமட்டுமின்றி, எதிர்காலத் தலைமுறை வளர்ச்சிக்காக மித அதிவேக இரயில் Semi High-Speed Railway இரயில்வே அமைப்பான மண்டல விரைவுப் போக்குவரத்து அமைப்பு; Regional Rapid Transit System மற்றும் உயர் போக்குவரத்து அமைப்பான Ropeway போன்ற அமைப்பை உருவாக்கி இரயில்வே வளர்ச்சி குறித்து சிந்தித்து செயலாற்றி நம்முடைய தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### செமி கண்டக்டர் துறையில் - கோவை செழுமை அடைந்திடும்!

தமிழ்நாடு அரசினுடைய இந்த நிதிநிலை அறிக்கை நடப்பு ஆண்டிற்கான வெறும் புள்ளிவிவரங்களை மட்டும், வரவு-செலவு குறித்த புள்ளி விவரங்களை மட்டும் கொண்டதாக அமையவில்லை. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், எங்களுக்கு வழிகாட்டியபடி எதிர்கால தமிழ்நாட்டினுடைய வளமான எதிர்காலத்திற்கான வலுவான அடித்தளம் அமைத்திடும் வகையில் உயரிய நோக்கங்களை உள்ளடக்கி இந்த நிதிநிலை அறிக்கை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Chip War என்கின்ற ஒரு நூல் கடந்த சில ஆண்டுகளாக உலகெங்கும் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இதை எழுதியவர் Chris Miller என்பவர் ஆவார். Semiconductor துறையில் எந்த நாடு முதலிடம் வகிக்கிறதோ, அந்த நாடுதான் பொருளாதார வளர்ச்சியிலும் முதலிடம் வகிக்கும் என்று அவர் பல்வேறு தரப்பினரோடு கலந்து, ஆய்ந்து அதை நிரூபித்தும் இருக்கிறார். அவர்கள் கடந்த முறை உலக முதலீட்டாளர் மாநாட்டிற்கு இங்கே, சென்னைக்கும் நேரடியாக வருகை தந்து தன்னுடைய கருத்துகளை நம்மிடத்திலே பகிர்ந்து கொண்டு இருக்கிறார். இன்று உலகெங்கும் பல நாடுகளும் Semiconductor துறையில் போட்டி போட்டுக் கொண்டு செயலாற்றி வருகின்றன. எனவே, அந்தத் துறையில் தமிழ்நாடும் முன்னிலைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து அவருடைய ஆலோசனைகளைப் பெற்று Semiconductor திட்டம் ஒன்றினை ஐந்து ஆண்டுத் திட்டமாக நம்முடைய அரசு இன்றைக்கு அறிவித்து இருக்கிறது. (மேசையைத் தட்டும்ஒலி) அதில் இரண்டு Semiconductor

தொடர்ச்சி 6-ஆம் பக்கம்

## பால் நினைந்தூட்டிய பார்வதியும் காலை உணவளிக்கும் நம் முதல்வரும்!

**தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி என்கின்ற ஒரு நகரம் இருப்பதை நாம் அறிவோம். ஏழாம் நூற்றாண்டினுடைய காலகட்டத்தில் சிற்றூராக இருந்த சீர்காழியில் ஒரு காலை பொழுதில், அந்த ஊரில் இருக்கக்கூடிய சிவன் கோயிலினுடைய குளக்கரையில் ஒரு குழந்தை அழுதுக் கொண்டிருந்தது. அந்தக் குழந்தை பசியால் கதறி அழுதபோது, அந்தக் குழந்தையினுடைய பசியை ஆற்றுவதற்கு, அதனுடைய அன்னை அருகில் இல்லை. அதனுடைய உற்றாரும், சுற்றாரும், உறவினரும் அருகில் இல்லை.**

**ஆனால், அந்தக் குழந்தைத் தொடர்ந்து அழுதபோது, அந்தக் குழந்தையின் அழுக்குரல் அந்த ஊர் இறைவி அவர்களுடைய செவிகளில் விழுந்து பாலுக்காக, ஏங்கி வயிற்றுப் பசிக்காக அழக்கூடிய அந்தக் குழந்தையினுடைய பசியை ஆற்றுவதற்கு தாய்மை உணர்வோடு பார்வதியாக இருக்கக்கூடிய அந்த உமையம்மையே நேரடியாக வந்து, அந்தக் குழந்தைக்கு ஞானப் பாலினை ஊட்டி, அதனுடைய பசியை தணித்ததாக நான் புராணங்களிலே படித்து இருக்கிறேன்.**

**அப்படி உமையம்மையே ஞானப்பால் ஊட்டியதால்தான், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனாக அந்தக் குழந்தை உருவாயிற்று என்பதும், அதை ஒட்டி அந்தக் குழந்தை,**

**‘தோடுடைய செவியன்**
**விடையேறியோர்**
**தூவெண்மதி சூடிக்**
**காடுடையசுட லைப்பொடிபூசி**
**என் உள்ளங்கவர் கள்வன்’**

**என்று அழகிய தமிழிலே அந்தக் குழந்தை பாடியதாகவும் நான் படித்து இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

**பேரவையினுடைய தலைவர் அவர்களே, அன்றைக்கு ஒரு மழலையினுடைய அழுகுரலுக்கு உமையம்மை நேரடியாக இறைவியே வந்து பாலூட்டினாள். மலைமகள் அன்றைக்கு அந்தக் குழந்தைக்கு பாலூட்டினாள்.**

**ஆனால் இன்றைக்கோ தமிழ்நாட்டிலே பள்ளிகளுக்கு செல்லக்கூடிய எந்தக் குழந்தையும் பசியிலே அழவே கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்று தமிழ்நாட்டினுடைய தலைமகனாக, நம் உள்ளம் கவர் கள்வனாக இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காலை உணவுத் திட்டத்தை இன்றைக்கு நமக்கு அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.**

## வானம் பார்த்த பூமியாக இருந்தாலும்

# மானம் காக்கும் நாடு எங்கள் தமிழ்நாடு!

## சட்டப்பேரவையில் அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலுரை!

நான் இதன் மூலமாக இந்த அவைக்கு தெரிவிப்பது என்னவென்றால், மக்கள் நலனுக்கு எதிராக தலைநகரிலிருந்து எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் எதிரான குரல் கொடுப்பதற்கு சென்னை மாகாணம் வழி வழியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மக்கள் பக்கத்தில்தான் என்றைக்கும் இருப்போம் என்பது இந்த மண்ணின் குணம் என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

### ஆதிக்கத்திற்கு தலைவணங்காத தமிழ்நாடு!

வடக்கே இருந்து வரக்கூடிய எந்தவொரு ஆதிக்கத்திற்கும் தமிழ்நாடு வரலாற்றில் எந்த காலக் கட்டத்திலும் தலை வணங்கியதில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

மகா அலெக்சாண்டர் இந்தியாவிற்கு வந்தார். மகா அலெக்சாண்டருடைய வெற்றிப் பாதையில் தமிழ்நாடு ஒருபோதும் இருந்ததில்லை. மௌரியப் பேரரசர் சந்திரகுப்த மௌரியரால் தமிழ்நாட்டு எல்லையைத் தொட்டுக்கூடப் பார்க்க முடியவில்லை (மேசையைத் தட்டும் ஒலி). அசோக சக்கரவர்த்தியினுடைய ஆட்சிச் சக்கரம் தமிழ் நிலப்பரப்பில் சுழலவில்லை (மேசையைத் தட்டும் ஒலி). குப்தர்களின் காலம் ‘பொற்காலம்’ என்று அழைக்கப்பட்டாலும் சமுத்திரகுப்தனுடைய காலடி இந்தத் தமிழ் மண்ணில் கடைசி வரை படியவில்லை. கனிஷ்கருடைய ஆட்சி எல்லைகள் என்பது விந்தியத்திற்கு தெற்கே ஒருபோதும் தாண்டியதில்லை. அக்பர் பாதுஷாவின் ராஜ்ஜியம் தமிழ்நாட்டை எட்ட முடியவில்லை. இந்துஸ்தானின் பாதுஷா என்று மட்டுமில்லாமல் நான் இந்த Universe-க்கே நான் தான் ராஜா ‘Emperor of the Universe’ என்று தன்னை Alamgir என்று அழைத்துக்கொண்டாரே ஔரங்கசீப், அந்த ஔரங்கசீப்பினால் கூட தமிழ்நாட்டை வெல்ல முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஔரங்கசீப்பினாலேயே ‘மலை எலி’ என்று அழைக்கப்பட்டாரே மராட்டிய மண்ணின் சத்ரபதி சிவாஜி அவர்கள், அவரால்கூட தமிழ்நாட்டை ஆட்சி செய்ய முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வரலாறு தமிழ் மண்ணிற்கு மட்டுமே உரித்தான வரலாறு என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் முன்னரே சொன்னதுபோன்று, முதல்வர் அவர்கள் ஊட்டிய அந்த தன்மான உணர்வின் வழியில் வானம் பார்த்த பூமியாக இருந்தாலும், மானம் காக்கும் நாடு, எங்கள் தமிழ்நாடு என்கின்ற அந்த உறுதியோடு, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதல்வர் அவர்கள் பெருமையோடு சுட்டிக்காட்டினாரே, அதுபோல பாடமாக நின்று கொண்டிருக்கும் எங்களுடைய அருமைத் தலைவர் கலைஞர் அவர்களின் அழியாத காவிய வரிகளை, (மேசையைத் தட்டும் ஒலி) நான் நினைவுகூர்ந்து, என் உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**“புலியின் குகையினிலே அழகில்லை-புதுமையல்ல**
**கிலியும் மெய் சிலிர்ப்பும் கீழிறங்கும் தன்மையும் தலைகாட்டா**
**மானத்தின் உறைவிடம்”-எங்கள் தமிழ்நாடு.**
**(மேசையைத் தட்டும் ஒலி)**

**“இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும்**
**இங்கு வீணை நரம்பினிலே இசை துடிக்கும்**
**அதுவும் மானம், மானம் என்றே முழங்கும்”**
**(மேசையைத் தட்டும் ஒலி)**

**என்றே சொல்லி, என் உரையை நான் நிறைவு செய்கிறேன்**, (மேசையைத் தட்டும் ஒலி)

**- அமைச்சர் தங்கம் தென்னரசு,**
(நிதிநிலை அறிக்கை பதிலுரை)